


**24. 06. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. பாகுபாடற்ற சமுதாயத்தை உருவாக்கும் முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்திருக்கிறார்.

2. பாஸ்போர்ட் விநியோக நடைமுறை எளிதாக்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. உற்பத்தியையும் ஏற்றுமதியையும் அதிகரிக்கும் வகையில் வரிகளை குறைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாட்டில் பட்டா விவரங்களை எளிதில் பெறும் வகையில் கைபேசி செயலி அறிமுகம் செய்யப்படும் என்று மாநில அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன் கூறியுள்ளார்.

5. U.S Open பேட்மிண்டன் போட்டிகள் Iowa-வில் இன்று தொடங்குகின்றன.

**இனி விரிவான செய்திகள்**

*********

**பிரதமர்**

நம் நாட்டில் பாகுபாடற்ற நிலையை உருவாக்குவதற்கான முயற்சிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்திருக்கிறார்.

தேசபிதா மகாத்மா காந்தியடிகள், ஆன்மீகத் தலைவர் ஸ்ரீ நாராயண குரு ஆகியோர் இடையே 1925-ம் ஆண்டு மார்ச் 12-ம் தேதி சிவகிரியில் நடைபெற்ற உரையாடலின் நூற்றாண்டு கொண்டாட்டங்களை இன்று புதுதில்லியில் துவக்கிவைத்து பிரதமர் பேசினார்.

அனைத்து நிலைகளிலும் பாகுபாடில்லா சமுதாயம் உருவாக வேண்டும் என்ற ஸ்ரீநாராயண குருவின் தொலைநோக்கு பார்வையை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

அவருடைய போதனைகள் மனித குலத்திற்கு பெரும் பொக்கிஷமாக திகழ்கிறது என்று பிரதமர் புகழாரம் சூட்டியுள்ளார்.

நலிந்த மற்றும் விளிம்பு நிலை மக்களின் மேம்பாட்டிற்கான பெரும் திட்டங்களை வகுக்கும்போது ஸ்ரீநாராயண குருவின் போதனைகள் தனிப்பட்ட விதத்தில் தமக்கு உத்வேகமாக திகழ்ந்ததாக பிரதமர் குறிப்பிட்டார்.

ஆன்மீகத்தை பொது நலத்திற்காக ஸ்ரீநாராயண குரு பயன்படுத்தியதாக குறிப்பிட்ட பிரதமர், மகாத்மா காந்தியடிகளும் ரபீந்திரநாத் தாகூரும் இதிலிருந்து உத்வேகம் பெற்றதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதமரின் வீட்டு வசதி திட்டம் பற்றி எடுத்துரைத்த அவர், ஏராளமான ஏழைகளுக்கும், தலித் பிரிவினருக்கும், விளிம்பு நிலை குடும்பங்களுக்கும் அடிப்படை வசதிகளுடன் கூடிய நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டிருப்பதை எடுத்துரைத்தார்.

ஆளுமை மற்றும் மாண்பிற்கான அடையாளங்களாக இவை திகழ்கின்றன என்றார்.

நம் தேசம், சமூக கட்டமைப்பு, பொருளாதாரம், ராணுவப்பிரிவுகளில் முன்னோடி நாடாக பயணிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்த பிரதமர் திறன்மேம்பாடு போன்றவற்றால் இளையோர் ஆளுமை பெற்று, சுயசார்பு பாரதத்தை முன்னெடுத்து செல்வதாக குறிப்பிட்டார்.

*********

**ஜெய்சங்கர்**

பாஸ்போர்ட் விநியோக முறைகளின் தரம் பெருமளவு முன்னேறியிருப்பதாக வெளியுறவத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

13ஆவது பாஸ்போர்ட் சேவை தினத்தை ஒட்டி அமைச்சர் வெளியிட்டுள்ள செய்தியில் மின்னணு தொழில்நுட்பங்களால் பாஸ்போர்ட் விநியோகம் எளிதாகியிருப்பதாக கூறினார்.

சர்வதேச பாஸ்போர்ட் சேவை திட்டத்தின் 2ஆவது கட்டப்பணிகள் நடைபெற்று வருவதாகவும், விரைவில் அனைத்து தூதரகங்கள் மற்றும் இணை தூதரகங்களில் படிப்படியாக இது செயல்படுத்தப்படும் என்றார்.

M passport Police செயலி மூலம் பாஸ்போர்ட் சரிபார்ப்பு பணிகளுக்கான கால அவகாசம் 5 தினங்களாக குறைந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இதனிடையே 13-வது பாஸ்போர்ட் சேவை தினத்தையொட்டி, திருச்சி மண்டலத்தின் துணை பாஸ்போர்ட் அதிகாரி திருமதி. பானுமதி பொன்ராஜ் எமது செய்திப்பிரிவிடம் தெரிவிக்கையில்,

**---- வாய்ஸ் -----**

*********

**நிர்மலா**

உற்பத்தியையும் ஏற்றுமதியையும் அதிகரிக்கும் வகையில் வரி சுமைகளை குறைக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

புதுதில்லியில் ஏற்றுமதி இறக்குமதி வங்கி வர்த்தக மாநாடு தொடர்பான நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அமைச்சர் நாட்டின் மொத்த ஏற்றுமதி இதுவரை இல்லாத அளவிற்கு 825 பில்லியன் டாலராக அதிகரித்து 6 சதவிகித வளர்ச்சியை எட்டியிருப்பதாக சுட்டிக்காட்டினார்.

உலக அளவிலான ஏற்றுமதி வளர்ச்சி 4 சதவிகிதமாக உள்ள நிலையில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் சென்ற நிதியாண்டு 6.3 சதவிகிதமாக இருந்ததாக குறிப்பிட்டார்.

தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை இறுதியாக்க பல்வேறு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடைபெறுவதாக கூறிய அவர் இந்த ஒப்பந்தங்கள் மூலம் நம் நாட்டின் எதிர்கால ஏற்றுமதி பெருமளவு வளர்ச்சி காணும் என்றார்.

*********

**பாதுகாப்பு அமைச்சகம்**

தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகளை வலுவுடன் எதிர்கொள்ளும் வகையில் அவசர கொள்முதல் இயக்கத்தின் கீழ் 1981 கோடி ரூபாய் மதிப்பிலான 13 ஒப்பந்தங்களுக்கு பாதுகாப்பு அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது.

ஒருங்கிணைந்த ட்ரோன் திட்டம், தாழ்நிலை இலகுரக ரடார் கருவிகள், குறுகிய தூர வான் ஏவுகலன்கள் மற்றும் ஏவுகணைகள், குண்டு துளைக்காத மேலாடைகள் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

பாதுகாப்பு சவால்களை திறனுடன் எதிர்கொள்ளும் வகையில் ராணுவ படையை அதி நவீனமயமாக்குவதை நோக்கமாக கொண்டு இந்நடவடிக்கை.

*********

**ராஜ்நாத்சிங்**

முப்படைகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்களின் குறைதீர்க்கும் முகாம் வரும் 30ஆம் தேதி திருச்சியில் நடைபெறுகிறது.

மன்னார்புரத்தில் உள்ள ஆயுதபடை மைதானத்தில் நடைபெறும் இந்த ஒருநாள் முகாமில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் பங்கேற்று ஓய்வூதியதாரர்களின் குறைகளை கேட்டறிகிறார்.

எனவே புதுக்கோட்டை, திருச்சி உள்ளிட்ட தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களை சேர்ந்த முப்படைகளின் ஓய்வூதியதாரர்கள் உரிய ஆவணங்களுடன் இந்த முகாமில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விருப்பமுடையவர்கள் தங்களது பெயரை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

இம்முகாமில் பங்கேற்க இருக்கும் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு இலவச பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

*********

**ஈரான்**

ஈரானுடனான போர் நிறுத்தத்திற்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்பின் பரிந்துரையை ஏற்று இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேத்தன்யாஹூவின் அலுவலக அறிக்கை தெரிவித்துள்ளது.

டெஹ்ரானிலிருந்து அணு மற்றும் ஏவுகணை அச்சுறுத்தல்களை அகற்றுவதற்கான இஸ்ரேலின் இலக்கு எட்டப்பட்டதை அடுத்து சண்டை நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

ஈரானின் அணு அச்சுறுத்தலை அகற்றுவதற்கான நடவடிக்கைகளுக்கு ஆதரவும், பங்களிப்பும் தந்த அமெரிக்காவிற்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் இஸ்ரேல் கூறியுள்ளது.

முன்னதாக அதிபர் ட்ரம்ப் வெளியிட்டுள்ள செய்தியில் இஸ்ரேல் - ஈரான் நாடுகளுக்கிடையே சண்டை நிறுத்தம் நடைமுறைக்கு வந்துள்ளதாகவும் இருநாடுகளும் அதனை மீற வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

*********

**ஆபரேசன் சிந்து**

இந்நிலையில் ஈரானிலிருந்து 2 ஆயிரத்து 295 இந்தியர்கள் **"ஆபரேசன் சிந்து"** இயக்கம் மூலம் நாடு திரும்பியுள்ளனர்.

**அம்மானிலிருந்து இன்றுகாலை புதுதில்லி திரும்பிய** இந்தியர்களை விமானநிலையத்தில் வரவேற்ற மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன், 22 மாநிலங்களை சேர்ந்த மக்கள் தாயகம் திரும்பியுள்ளதாக கூறினார்.

நாடு திரும்பியதில் அனைவரும் மகிழ்ச்சியில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பதற்றம் நிறைந்த பகுதியில் உள்ள இந்திய குடிமக்களை மீட்பதே மத்திய அரசின் உயர் முன்னுரிமை என்று கூறினார்.

**இதேபோல் இஸ்ரேல் நாட்டில் இருந்து தாயகம்** திரும்பிய 161 இந்தியர்களை விமான நிலையத்தில் வரவேற்ற மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு. பபித்ரா மார்க்ஹெரிட்டா ஈரான் இஸ்ரேல் நாடுகளில் உள்ள இந்தியர்களுடன் அரசு தொடர்பில் இருப்பதாகவும் தேவையான அனைத்து உதவிகளும் வழங்குவது உறுதி செய்யப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

ஜோர்டான் மற்றும் எகிப்து நாடுகளில் உள்ள இந்தியர்களை தாயகம் அழைத்து வரவும் இந்திய விமானபடை சிறப்பு சேவைகளை தொடங்கியுள்ளது.

நட்பு நாடான இலங்கை உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த மக்களும் இந்திய விமானப்படை விமானங்கள் மூலம் அழைத்து வரப்படுவது குறிப்பிடத்தக்கது.

*********

**முதலமைச்சர்**

வேலூர் திருப்பத்தூர் மாவட்டங்களின் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் நாளையும், நாளை மறுநாளும் கள ஆய்வு மேற்கொள்கிறார்.

வேலூரில் 198 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அரசு பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையை நாளை அவர் திறந்துவைக்கிறார்.

இதனிடையே மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி பொறுப்புகளில் பங்கேற்பு உரிமை வழங்கியதற்காக ஒருங்கிணைப்பு குழு நிர்வாகிகள் முதலமைச்சரை சென்னையில் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்துள்ளனர்.

*********

**கே.கே.எஸ்.எஸ்.ஆர்**

தமிழ்நாட்டில் சர்வே எண் மற்றும் பட்டா விவரங்களை எளிதாக பெறும் வகையில் கைபேசி செயலி இந்தாண்டு இறுதிக்குள் அறிமுகம் செய்யப்படும் என்று மாநில வருவாய் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் பட்டா வழங்கும் நடைமுறையை எளிமையாக்கி 16 லட்சம் பேருக்கு பட்டா வழங்கப்பட்டதாக கூறினார்.

வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டு பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தென்மேற்கு பருவமழை இயல்பான அளவில் தான் பெய்துள்ளதாகவும், நீலகிரி மாவட்டத்தில் மழையால் சில இடங்களில் ஏற்பட்ட மண் சரிவு உடனடியாக சரிசெய்யப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

*********

**அன்பில் மகேஷ்**

தமிழ்நாட்டில் மாவட்ட கல்வி அலுவலர்களின் கூட்டம் இரண்டாவது நாளாக மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.

நேற்று காலையிலும், மாலையிலும் இரு அமர்வுகளாக நடைபெற்ற கூட்டத்தில் 25 மாவட்டங்களை சேர்ந்த கல்விதுறை அலுவலர்களுடன் கல்வி மேம்பாட்டு திட்டங்கள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக இன்று எஞ்சியுள்ள 13 மாவட்டங்களை சேர்ந்த கல்வி அலுவலர்களின் கூட்டம் நடைபெறுகிறது.

கல்வி வளர்ச்சிக்கான திட்டங்கள், கடைகோடி கிராம பள்ளிகளுக்கும் அரசின் திட்டங்கள் சென்றடைவது உள்ளிட்ட கல்வித்துறையின் பல்வேறு அம்சங்கள் குறித்து இதில் விரிவாக ஆராயப்பட்டது.

*********

**மாநில அரசு – மூன்றாம் பாலினத்தவர்**

தமிழ்நாட்டில் புதுமைப்பெண், தமிழ்புதல்வன், திட்டத்தின் கீழ் திருநங்கை, திருநம்பிகள் பயன்பெறுவதற்றான நிபந்தனைகள் தளர்த்தப்பட்டுள்ளது.

இந்த திட்டங்களில் பயன்பெற மூன்றாம் பாலினத்தவர், 6 முதல் 12ஆம் வகுப்புவரை அரசு பள்ளிகளில் தமிழில் படித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை தளர்த்தப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

நாமக்கல்லில் இன்று நடைபெற்ற சிறப்பு முகாமில் திருநங்கையருக்கு அரசின் நல திட்டங்கள் வழங்கப்பட்டன.

*********

**பழனிவேல் தியாகராஜன்**

மதுரை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, கள்ளர் அரசு உயர்நிலைப்பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை மாநில தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் இன்று ஆய்வு செய்தார்.

*********

**கண்ணதாசன் பிறந்த தினம்**

கவிரசு கண்ணதாசனின் 99ஆவது பிறந்த தினத்தை ஒட்டி மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்ட சமூகவலைதள பதிவில் தமிழ் இலக்கியத்துறைக்கு கவிஞர் கண்ணதாசன் பெரும் பங்களிப்பு ஆற்றியுள்ளதாக புகழாரம் சூட்டினார்.

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில் மூப்பில்லா தேன் தமிழில் இறவா கவிதைகளை படைத்தவர் கண்ணதாசன் என்று போற்றியுள்ளார்.

சென்னை தியாகராயநகரில் உள்ள கண்ணதாசன் திருவுருவ படத்திற்கு மாநில அமைச்சர்கள் திரு.சாமிநாதன், திரு.சேகர்பாபு உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் கண்ணதாசன் மணிமண்டபத்தில் அன்னாரது திருவுருவ சிலைக்கு மாநில அமைச்சர் திரு.பெரியகருப்பன் மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினார்.

*********

**இருவரி**

**நாமக்கல் மாவட்டத்தில் வறுமை கோட்டிற்கு கீழ்** உள்ள மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலான திட்டத்தின் கீழ் பயன்பெற அடுத்த மாதம் 14-ம் தேதிவரை விண்ணப்பிக்கலாம்.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்பு கல்வியாண்டில்** ஆதி திராவிடர் பழங்குடியின பள்ளி விடுதிகளில் கல்வி பயில விரும்பும் தகுதியுடைய மாணாக்கர் உரிய சான்றுகளுடன் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

**திருச்சி பெரம்பலூர் திருவள்ளூர்** மாவட்டங்களில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

**திருச்சி மாவட்டத்தில் தனியார்துறை வேலை** வாய்ப்பு முகாம் வரும் வெள்ளிகிழமை நடைபெற உள்ளது.

*********

**நாகை வாய்ஸ்**

**மேட்டூர்** அணையிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர், நாகை மாவட்டம், கடைமடை வரை வந்தடைந்ததை விவசாயிகள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

இதுகுறித்து விவசாயி பேசுகையில்,

----- வாய்ஸ் -----

*********

**பேட்மிண்டன்**

U.S Open பேட்மிண்டன் போட்டிகள் Iowa-வில் இன்று தொடங்குகின்றன.

இன்று நடைபெறும் தகுதி சுற்று ஆட்டங்களில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சிராக்செனன் ராகுல் பரத்வாஜ் ஆகியோரும்,

மகளிர் ஒற்றையர் தகுதி சுற்று ஆட்டத்தில் இரா ஷர்மாவும் களமிறங்குகின்றனர்.

*********

**கிரிக்கெட்**

லீட்ஸில் இந்தியாவிற்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இறுதி நாளான இன்று இங்கிலாந்து வெற்றிபெற மேலும் 350 ரன் எடுத்தாக வேண்டும்.

நேற்றைய 4-ம் நாள் ஆட்ட நேர இறுதியில் இங்கிலாந்து தனது 2-வது இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி 21 ரன் எடுத்திருந்தது.

**ஸ்கோர் :**

இந்தியா முதல் இன்னிங்ஸ் 471

2ஆவது இன்னிங்ஸ் 364

இங்கிலாந்து முதல் இன்னிங்ஸ் 465

5-ம் நாள் ஆட்டம் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

*********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**